
# திராவிடத்தால் வாழ்கிறோம்

783

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

3

**தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்**

# "ஒற்றுமைப் பண்பாடே கழகத்தின் பணி!"

ஒவ்வொரு ஆண்டும் இஸ்லாமிய மக்கள் ரம்ஜான் மாதத்தில்நோன்பு கடைப்பிடித்து வருகின்றனர். குறிப்பாக, இந்த ரம்ஜான் மாதத்தில் வெள்ளிக் கிழமைகளில் அதிகளவிலான இஸ்லாமிய மக்கள் மசூதிகளுக்குச் சென்று தொழுகை நடத்துவது வழக்கம். இந்நிலையில் இந்துக்கள் கொண்டாடும் 'ஹோலி பண்டிகை' யும், முஸ்லிம்கள் கொண்டாடும் 'ரமலானின் ஜும்மா நோன்பு'ம் கடந்த வாரத்தில் ஒரேநாளில் வட மாநிலங்களில் கொண்டாடப் பட்டது. இந்தக் கொண்டாட்டம் பீகார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேச மாநிலங்களில் பெரும் பதற்றத்தையும், அச்சத்தையும் உருவாக்கி இருக்கிறது.

ஹோலி பண்டிகை வருடத்திற்கு ஒருமுறை வரும். ஆனால், வெள்ளிக்கிழமை தொழுகை என்பது வருடத்திற்கு 52 முறை வரும், ஆகவே, ஹோலியின் வர்ணங்களை விரும்பாதவர்கள் அன்றைய நாளில் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று வெறுப்பைக் கக்கினர் பா.ஜ.க. பிரமுகர்கள். அந்தக் கருத்தை, அப்படியே பிரதிபலித்தார் உ.பி. முதல்வர் ஆதித்யநாத்.

தவிர, உ.பி., பீகார், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில், பல்வேறு பகுதிகளில் மசூதிகளைத் திரையிட்டு மூட வேண்டிய நெருக்கடிகளையும் சந்தித்தனர் இஸ்லாமிய மக்கள்.

பதற்றமான இடங்களில் இரண்டு மத நிகழ்வுகளும், சுமூகமாக நடைபெற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய காவல்துறையோ சில இடங்களில் வேடிக்கை பார்த்தது. மசூதிகளின் வாசலில் ஹோலி கொண்டாட அனுமதித்ததுடன், மதவெறி ஊட்டப்பட்டவர்கள், மசூதியை இடிப்பதற்குச் சூளுரைத்துச் சென்றதையும் வேடிக்கை பார்க்கும் நிலையில் இருந்தனர்.

பல ஆண்டுகளாக மதங்களைக் கடந்து கொண்டாடப்பட்டு வரும் ஒரு பண்டிகையை வைத்து, இன்று, மக்கள் மனதில் பிளவினை உருவாக்கத் துடிக்கின்றன, 'சங் பரிவார்' அமைப்புகள். இன்று, நேற்றல்ல, அதன் தொடக்கக் காலம்தொட்டே மதவழிபாடுகளை வைத்து, பிரிவினைச் சிந்தனையை மக்களிடம் விதைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இப்படியானச் சூழலில்தான் சிறுபான்மையினர் வழிபாட்டு உரிமைகளைக் காப்பதில் தமிழ்நாடும், திராவிட இயக்கங்களும், குறிப்பாகக் கழகமும் கொண்டிருக்கும் உறுதிப்பாட்டினை நாம் உயர்த்திப் பிடிக்க வேண்டி இருக்கிறது.

## வழிபாட்டு உரிமையில் அண்ணா

1967-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரம். சென்னையை அடுத்த அச்சிறுப் பாக்கத்தில் பள்ளிப்பேட்டை என்கிற இடத்தில், இஸ்லாமியர்கள் தொழுகைக்காக பள்ளிவாசல் எழுப்புவதற்கு அங்குள்ள சிலர் எதிர்ப்பு தெரிவிக்க, இருதரப்பினரும் மோதிக்கொள்ளும் பதற்றமான சூழல் ஏற்பட்டது. ரமலான் நாளுக்கு முந்தைய நாள்; இஸ்லாமியர்கள் தங்கள் வழிபாட்டு உரிமையை விட்டுவிடக்கூடாது என முனைப்பு காட்டுகின்றனர்.

எதிர்த்தரப்பில், பெரும்பான்மை மதவாத சிந்தனைகொண்டவர்கள் நிற்க, சிறுபான்மையினர் உரிமைக்காக கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் மகன் மியாகானின் தலைமையில் சிறுபான்மையினர் கூடியிருந்தனர்.

அன்று நள்ளிரவு நேரத்தில், அந்த கிராமத்தில் காவல்துறையினர் வாகனங்களில் வந்து இறங்குகின்றனர். கலவரச் சூழலைக் கட்டுப்படுத்த வந்த காவலர்களாக இருக்கலாம் என நினைத்திருந்த நேரத்தில், அந்த வாகனங்களில் கீற்றுக் கொட்டகைப் பள்ளிவாசல் கட்டுவதற்காக பொருட்களை இறக்கி வைக்கின்றனர்.



* மலேசியா தி.மு.கழக கூட்டத்தில் உரையாற்றும் பேரறிஞர் அண்ணா

காலையில், ரமலான் தொழுகைக்கு முன்னர் பள்ளிவாசல் எழுப்பப்பட்டு இருக்க வேண்டும் என்று தங்களுக்கு மேலிடத்து உத்தரவு வந்திருப்பதாக, மியாகானிடம் காவலர்கள் கூற, கூடியிருந்த அனைவருக்கும் இன்ப அதிர்ச்சி. அந்த அதிர்ச்சி அத்தோடு முடியவில்லை.

வழிபாடு முடிந்ததும் அண்ணா அருகிலுள்ள சுற்றுலா மாளிகையில் முகாமிட்டு முன்னேற்றங்களைக் கண்காணித்து வருவதை அறிந்து மியாகான் ஆச்சர்யப்பட்டார்.

அந்த நேரத்தில் டெல்லியில் இருந்த காயிதே மில்லத் அவர்கள் மியாகானை பள்ளிப்பேட்டைக்கு அனுப்பியதுடன், முதலமைச்சர் அண்ணாவுக்கு இந்தப் பிரச்சினை குறித்து கவனப்படுத்தினார். பேரறிஞர் அண்ணா உடனடியாக நடவடிக்கை எடுத்தது மட்டுமல்லாமல், கிராமத்திற்கு அருகிலும் இருந்தார்.

சிறுபான்மையினர் உரிமைகளில் கழகம் கொண்டுள்ள பற்றுக்கு, நமது முதல் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அந்த சம்பவமே மிகப்பெரிய சான்றாக இருக்கும்.

## தமிழர் நெறியும் இஸ்லாம் மார்க்கமும்

அண்ணா, 'இஸ்லாமை ஒரு மதமாகப் பார்க்கவில்லை மாறாக அது மனிதனை நல்வழிப்படுத்தும் ஒரு மார்க்கம்' என்று குறிப்பிடுகிறார். மேடைகள் தோறும் முழங்கினார். 'இஸ்லாம் மார்க்கம் அரபு நாட்டில் இருந்து நபிகள் வழியாக அருளப்பட்டிருந்தாலும், பழந்தமிழர்களின் சமூக அமைப்பைத்தான் வாழ்க்கை நெறியாகக் கொண்டுள்ளது' என்பதை பேரறிஞர் அண்ணா பல மேடைகளில் பேசி இருக்கிறார்.

> சமூக நல்லிணக்கத்திற்கான ஆயுதத்தை பெரியாரும், அண்ணாவும் தங்களது இறுதிமூச்சு உள்ளவரை பேணிப் பாதுகாத்தனர்.

1957-ஆம் ஆண்டு அக்டோபர்7-ஆம் தேதி சென்னை, கடற்கரையில் நடைபெற்ற 'மீலாது விழா' மேடையில் அண்ணா பேசுகையில், "நபிகளின் ஆண்டவனுக்கு இணை வைத்தல் ஆகாது என்கிற பொன்மொழி என்னை நிறையவே யோசிக்க வைத்தது. ஆண்டவனுக்கு இணையாக ஒருவரை முன்வைக்க வேண்டும் என்றால், பெருங்குழப்பம் நிலவும். இந்தக் குழப்பம் பெரும்பான்மை இந்துத்துவத்தில் நிறையவே இருக்கிறது. இந்தக் குழப்பத்தில் இருந்து விடுதலையளிக்கும் மார்க்கமாக, இஸ்லாம் இருப்பதாலேயே எங்களைப் போன்ற திராவிட இயக்கச் சிந்தனையாளர்களுக்கு இஸ்லாம் மிகவும் நெருக்கமானது" என்றார். அந்தச் சிந்தனையில் இருந்துதான், பெரியாரிடமிருந்து விலகியபோது நாத்திகரான அண்ணா 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என தனது தம்பிகளுக்குப் புதிய வழிகாட்டினார்.

ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து, அதற்கு பூசைகள் செய்து, பிறரை ஏமாற்றும் எண்ணம் கூடாது என்பதுதான், இறைக் கோட்பாடு குறித்து பேரறிஞர் அண்ணா வலியுறுத்திய நாத்திகப் பார்வை. அதைத்தான் இஸ்லாம் வலியுறுத்துகிறது என, 1962 -ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி அபிவிருத்தீஸ்வரம் பள்ளிவாசலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசும்போதும், 1965-ஆம் ஆண்டு மலேசியாவின் தமிழ் முஸ்லிம்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசும்போதும் குறிப்பிடுகிறார் அண்ணா.

"இஸ்லாம் மார்க்கம், தமிழர் வாழ்க்கை நெறிக்கு நெருக்கமானது. சாதி வேற்றுமைகளை மறக்கச் செய்யும் மதம் என்பதால், இஸ்லாம் எனக்கு நெருக்கமாக உள்ளது" என்றும் குறிப்பிடுகிறார்.

இஸ்லாமியர்களுக்கும் தனக்குமான உறவினைச் சுட்டிக்காட்டும் அண்ணா, 1940-ஆம் ஆண்டுகளில் இருந்தே சிறுபான்மை மக்களுடன் நெருக்கமான அரசியல் உறவில் இருந்ததைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஒற்றுமைப் பண்பாட்டை வளர்க்கச் செய்வதுதான் கழகத்தின் பணிகளில் ஒன்றாக வரையறுக்கிறார் பேரறிஞர் அண்ணா.

"வடநாட்டிலே இந்து - முஸ்லிம் கலவரம், கொலை வெறியாட்டம் நடந்தபோதுகூட தென்னாட்டிலே நல்ல தோழமை நிலவியது. அப்படிப்பட்ட தோழமை உணர்ச்சியும் ஒற்றுமைப் பண்பாடும் வளரச் செய்வது தி.மு.கழகப் பணிகளில் ஒன்றாகும்", இது 1961-ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது அவர் குறிப்பிட்டது.

அந்தப் பணியைத்தான் அவர், முதலமைச்சரானபோது அச்சிறுப்பாக்கத்தில் நடத்திக் காட்டினார். கழகம் இன்றளவும் அந்தப் பற்றில் உள்ளதைத்தான் மதுரை சிக்கந்தர் பள்ளிவாசல் வழிபாட்டு உரிமையில் பார்த்தோம்.

சிறுபான்மையினருடன் கழகம் கொண்டிருந்த நெருக்கம்தான், இன்றளவும் இந்து மத வெறி ஊட்டப்பட்டவர்களால் நமது நிலப்பரப்பில் காலூன்ற முடியாமல் இருப்பதற்குக் காரணம். அவர்களை அச்சத்தோடு பின்வாங்கச்செய்யும் பேராயுதமாகவும் விளங்குகிறது. இச்சமூக நல்லிணக்கத்திற்கான ஆயுதத்தை பெரியாரும், அண்ணாவும் தங்களது இறுதிமூச்சு உள்ளவரை பேணிப் பாதுகாத்தனர். நமக்கு வழங்கிச் சென்றுள்ளனர்.

...நீளும்

## வரலாற்றை அச்சுறுத்தும் பரிவாரங்கள்!

திரைப்படங்கள் சமூக மாற்றத்துக்கு வித்திட்ட வரலாறுகளை, நாம் அறிவோம். திராவிட இயக்கக் கருத்துகளைத் தாங்கி வந்த திரைப்படங்கள், தமிழ்நாட்டில் பகுத்தறிவு, சுயமரியாதைச் சிந்தனைகளை விதைத்து, அறிவுப் புரட்சிக்கு வழிசெய்தன. ஆனால், மதவெறி உணர்வைத் தூண்டி, கலவரம் செய்ய வேண்டும் என்பதற்காகவே, படம் எடுக்கத் தொடங்கி இருக்கின்றன 'சங் பரிவார்' அமைப்புகள். சில மாதங்களுக்கு முன் வெளியான 'சாவா' (chhaava) படம் மூலம், அதற்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளனர்.

இஸ்லாமியர்கள் மீது வெறுப்பைக் கக்கிய அந்தப் படம், மொகலாய மன்னர் ஔரங்கசீப் கல்லறையை இடிக்க வேண்டும் என்கிற உந்துதலை ஏற்படுத்தியதாகப் படத்தைப் பார்த்தவர்களைக் குறிப்பிட வைத்தது. அந்தப் படத்தை பார்க்க, அரசு ஊழியர்களுக்கு விடுமுறைச் சலுகைகள் அளிக்கப்பட்டன. இன்று, அந்தப் படம், நாக்பூரில் மிகப்பெரிய கலவரத்தை உருவாக்கி இருக்கிறது.

நேற்று முன்தினம், நாக்பூரில் கூடிய 'சங் பரிவார்' அமைப்புகள், ஔரங்கசீப் கல்லறையை இடிக்க அறைகூவல் விடுத்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். 'ஔரங்கசீப் கல்லறையை புல்டோசர் வைத்துத் தகர்க்க வேண்டும்' என பா.ஜ.க. எம்.எல்.ஏ. ஒருவர் பேசியது, பெரும் கலவரச் சூழலை உருவாக்கியுள்ளது.

"சாவா திரைப்படமே மொகலாய மன்னர் ஔரங்கசீப் மீது மக்களின் கோபத்தைத் தூண்டியது" என்றும், "நாக்பூர் கலவரம் திட்டமிட்டு நடத்தப்பட்டது" என்றும் கலவரம் குறித்து மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் எதிர்த்தரப்பு மீது குற்றம்சாட்டுகிறார். ஔரங்கசீப் கல்லறையை புல்டோசர் மூலம் தகர்க்க வேண்டும் என்றவர் மீது, எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால், இஸ்லாமியர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சங் பரிவார் அமைப்புகளின் அச்சுறுத்தல், பாபர், ஔரங்கசீப் என, அடுத்தடுத்து வரலாற்றின் மீது தாக்குதல்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன.

## ஃப்ளாஷ்பேக்



## தடம் மாறா பயணம்!



எம்.ஏ.எஸ்.இ.நாசர்

எனது மாமனார் முஹம்மது மீரான் அவர்கள், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி புதூரில் கழகத்தை வளர்ப்பதற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மலைக்கண்ணன் அவர்களைக் கொண்டு, அந்த ஊரில் கழகக் கொடியேற்றி, படிப்பகம் ஒன்றைத் திறந்து நிர்வகித்து வந்தார். இந்தப் படம், 1975-ஆம் ஆண்டு பேராசிரியர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு, பேராசிரியருக்கு மாலை அணிவித்து வாழ்த்துப் பெற்றபோது எடுக்கப்பட்டது. 50 ஆண்டுகளானாலும் எங்கள் குடும்பம் தடம் மாறாமல், கழகத்துடன் பயணிப்பதைப் பெருமையாக உணர வைக்கிறது இந்தப் புகைப்படம்.

– எம்.ஏ.எஸ்.இ.நாசர்,
இளையான்குடி புதூர், சிவகங்கை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம்ஓல் வூருக

## அறிவியலாளர் படம்!

1956-ஆம் ஆண்டு, திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டின்போது, மிகப் பிரமாண்டமான வகையில், 'பொருட்காட்சி', 'ஓவியக் கண்காட்சி' நடைபெற்றன. லெனின், வால்டேர், ரூசோ, கரிபால்டி, ஆபிரகாம் லிங்கன் என உலகத் தலைவர்களின் படங்கள் ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்டன. இவர்களுடன் அறிவியல் மேதைகளான ரோண்டர்ஜன், ஜேம்ஸ்வாட், மேடம் கியூரி, பாஸ்டர் என அறிவியலாளர்களின் படங்களும் வைக்கப்பட்டு வரவேற்பைப் பெற்றன.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131